விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 245 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 04 செவ்வாய்க்கிழமை (20.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களை நடத்துவேன்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களை நடத்துவேன். எம் மீதான மக்கள் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் வெற்றி பெறுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ 15

மத்திய வங்கி நிதி மோசடியில் ஈடுபட்ட

## அர்ஜூன மகேந்திரனை சட்டத்தின் முன் நிறுத்துவேன் - அநுர குமார

(கொழும்பு)



நான் தேர்தலில் வெற்றிபெற்றால், மத்திய வங்கியில் நிதி மோசடி செய்துவிட்டு சிங்கப்பூரில் தலைமறைவாகியுள்ள அர்ஜூன மகேந்திரனை நாட்டிற்கு அழைத்து வந்து சட்டத்தின் முன் நிறுத்துவேன் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க வாக்குறுதி 15

பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படாது

# அதிகாரப் பகிர்வுக்கு என்றும் இடமில்லை

## நாமல் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)



- வடக்குக் கிழக்கு ஒன்றிணையக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.
- அதிகாரப் பகிர்வுக்கு என்றுமே இடமில்லை.
- பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படாது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தொடர்பில் 566 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 566 ஆக அதிகரித்துள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை 31 ஆம் திகதி முதல் இம் மாதம் 17 ஆம் திகதி வரை இந்த முறைப்பாடுகள் கிடைத் துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு 15

மதச் சின்னங்களை

## பிரசாரங்களுக்கு பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களுக்கு மதச் சின்னங்களை பயன்படுத்த வேண்டாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் அலுவலகங்களைத் தயார் படுத்துவது தொடர்பில் வெளியிடப்பட் 15

யாழில் சந்தேகத்துக்கிடமான முறையில்

## விடுதியில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் நேற்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், மாவட்டச் செயலகத்திற்கு சற்றுத் தொலைவில் உள்ள 15

## வேலையில்லாப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)



எனது ஆட்சியில் வேலை இல்லாப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் 15

## வாக்காளர் ஒருவருக்கு ரூ.109 செலவு செய்யலாம்

### தேர்தல்கள் ஆணையாளர்



(கொழும்பு)

வாக்காளர் ஒருவருக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் செலவிடக்கூடிய அதிகபட்சத் தொகையை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, வாக்காளர் ஒருவருக்கு 109 15

ஐ.எம்.எப் நிபந்தனையை

## ஜனாதிபதி மீறியுள்ளார்

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பாதுகாப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது அவற்றை மீறியுள்ள 16

## தேர்தலைக் கண்காணிக்கும் ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக, இலங்கைக்கான தமது தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதானியாக ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோரை ஐரோப்பிய ஒன்றியம் நியமித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பைத் தொடர்ந்து, எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காகத் தேர்தல் கண்காணிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஐரோப்பிய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசாரக் கூட்டங்களில்
# மாலை, பொன்னாடை, ஆரத்தி எதுவும் வேண்டாம் - அரியநேந்திரன்



(முல்லைத்தீவு)

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் சகல பிரசாரக் கூட்டங்களிலும் பொன்னாடை போர்த்துதல், மாலைகள் அணிவித்தல், ஆரத்தி எடுத்தல் போன்ற கௌரவிப்பு செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவற்றைத் தவிர்த்து பிரசாரப் பணிகளுக்கான ஏற்பாடுகளை முற்கூட்டியே அறிவிக்குமாறு, ஏற்பாட்டாளர்களிடம் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் அறிமுகக்கூட்ட நிகழ்வில் முல்லைத்தீவில் மக்கள் மாலைகளை அணிவித்ததாகவும் அதனை தாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன், இனிவரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவ்வாறான கௌரவிப்பு செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு தாம் அன்புடன் கேட்டுக் கொள்ளவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரனின் முதலாவது தேர்தல் பிரசார கூட் டம் முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றிருந்தது.

முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா, சிவசக்தி ஆனந்தன், யாழ் மாநகர சபை முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன், ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், யதீந்திரா, பொதுமக்கள் பங்கேற்றனர். (ம-7)

## கொழும்புத் துறைமுகத்தில்
# அமெரிக்கக் கப்பல்



(கொழும்பு)

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

USS Spruance என்ற கப்பல் நேற்று (19) காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

விநியோக மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே குறித்த கப்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சுமார் 160 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் மொத்தம் 338 பேர் பயணிக்க முடியும் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

விநியோக மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்த பின்னர் இன்று இந்த கப்பல் நாட்டை விட்டு புறப்பட உள்ளது. (ம-7)

## இந்திய சுற்றுலாவிகளின்
# வருகை அதிகரிப்பு

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 16,383 இந்திய சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

அத்துடன், குறித்த காலப் பகுதியில் பிரித்தானியாவில் இருந்து 10,743 பேரும், சீனாவிலிருந்து 6,832 பேரும், இத்தாலியிலிருந்து 1470 பேரும் இலங்கைக்குப் பிரவேசித்துள்ளனர்.

சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிக்கும் முகமாக நாட்டின் சுற்றுலாத் தளங்களை மேம்படுத்தும் நோக்கில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹதிவுல்வெவ பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மஹதிவுல்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மொரவெவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-7)




## சஜித் ஜனாதிபதியானால்
# அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரி நீக்கப்படும்
## லக்ஷ்மன் கிரியெல்ல

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால் அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்படும்" என எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதித் தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்பது இன்று மிகவும் தெளிவாக தெரிகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியை தவிர இன்று அனைத்து கட்சிகளும் பிளவடைந்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி இன்று இல்லாமல் போயுள்ளது. மொட்டுக்கட்சி 4 ஆக பிளவடைந்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 4 ஆக பிளவடைந்துள்ளது. இடது சாரிகளான தேசிய மக்கள் சக்தி போராட்டகள குழுவினர் போன்றவர்களும் இரண்டாக பிரிந்துள்ளனர்.

இன்று இந்த நாட்டில் இன மத வேறுபாடின்றி அனைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியை வெற்றிபெற செய்வதற்கு ஒன்றிணைந்துள்ளனர். தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வெற்றியானது சூரிய உதயமும் சந்திர அஸ்தமனமும் போன்ற நிலையானதாகும்.

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று வேளை உணவை உட்கொள்வதற்கு சிரமப்படுகின்றனர். நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் இன்று பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் பேசுகின்றனர். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு மக்கள் மீதே சுமைகளை அதிகரித்தனர்.

பொருட்களின் விலையை அதிகரித்தனர். வரிக்கொள் கையினை அதிகரித்தனர். எனவே தற்போதைய அரசாங்கத்தினர் மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவே அரசாங்கத்தை வழிநடத்தி செல்கின்றனர்.

நாம் இந்த இடத்தில் ஒரு வாக்குறுதியை வழங்குகின்றோம். அதாவது ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் மிகவும் குறுகிய காலத்திற்குள் அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்படும். மக்களுக்கு நிவாரண விலையில் பொருட்களை கொள்வனவு செய்யக் கூடியவாறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் இவ்வாறு லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இஞ்சி விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இஞ்சியினை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக இஞ்சி பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் 3,000 ரூபாயாக காணப்பட்ட இஞ்சி ஒரு கிலோகிராம் தற்போது 1,000 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இஞ்சி இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமையே விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் நாமல் மீண்டும் சூளுரை

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கினை இணைக்க அனுமதிக்க மாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் பேருவளையில் இடம்பெற்ற ஆதரவாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைந்த வட கிழக்கில் அதிகாரப் பகிர்வு என்ற விடயம் தற்போது கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இணைந்த வட கிழக்கில் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்திற்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கிற்கு காணி,பொலிஸ் அதிகாரங்கள் ஒரு போதும் வழங்கப்படமாட்டாது என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

### ஆசிய நாடுகளில்

# இலங்கையின் மின் கட்டணம் 3 மடங்கு அதிகம்

### வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் மின்சாரக் கட்டணம் சுமார் மூன்று மடங்கு அதிகம் என அட்வோ காடா நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன் நிறைவேற்று அதிகாரி தநாத் பெர்னாண்டோ தேசிய பத்திரிகை ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்திருந்தார்.

மின்சார கட்டண அளவீட்டு திட்டத்தின் போது மின்சார அலகு ஒன்றிற்கான உற்பத்திக்கான செலவு மற்றும் மின்சார உற்பத்தியின் காலம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

இதனால், நீர்மின்சாரத்திற்கு மேலதிகமாக எண்ணெய் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுவதனால் இலங்கையில் மின்சாரக் கட்டணம் உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். உலகின் சில நாடுகளில் மின்சார நுகர்வோருக்கு புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை "ப்ரீ-பெய்ட்" முறைகள் மூலம் பெறலாம். இதனால் அவர்கள் அதிக மின் கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஸ்மார்ட் மின்சார மீற்றர்களை அறிமுகம் செய் வதன் மூலம் நுகர்வோர் தங்கள் மின் பயன்பாட்டை குறைக்க முடியும். இவ்வாறான செயற்பாட்டின் மூலம் வாடிக்கையாளர்கள் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை மின்சார பாவனையை நிர்வகித்து மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## நேரடி விவாதத்திற்கு தயாராகும் வேட்பாளர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் ஆறு பேரின் பங்குபற்றுதலுடன் நேரடி விவாதம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி இந்த விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர மற்றும் அரியநேத்திரன் ஆகியோருக்கு இதில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தை அனைத்து இலத்திரனியல் தொலைகாட்சிகள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் ஊடாக நேரடியாக ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (நி-6)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28 . 11 . 1948



உதிர்வு 18 . 08 . 2024

காரைநகர் மல்லிகையை பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு கொச்சிக்கடையை வாழ்விடமாகவும் கொண்டு இருந்த

அமரர். நவரத்தினம் தர்மராசா (M.G.R)

(தலைவர் காரை விளையாட்டு கழகம்)

எமது S.M கேணியடி சனசமூக நிலையத்தினதும் வெற்றி நாதன் அரங்கம் அமைப்பதிலும், ஈழத்து சிதம்பர திருவிழாக்களில் தவில்,நாதஸ்வர கச்சேரிகள் ஒழுங்கமைப்பதிலும், S.M கேணியடி சித்திரை புத்தாண்டு பால்முட்டி, தயிர்முட்டி விழா நடத்துவதிலும் முன்னின்று உழைத்த எமது சனசமூக நிலைய ஆயுட்கால அங்கத்தவர் தர்மராசா (M.G.R) அவர்கள் உடைய ஆன்மா தில்லைக்கூத்தன் திருவடிகளில் இளைப்பாற ஆண்டிகேணி ஐயனாரை பிரார்த்திக்கின்றோம்.

(268)

சிதம்பராமூர்த்தி கேணியடி சனசமூகநிலையமும்,
சிதம்பரா மூர்த்தி கேணியடி வாழ் மக்களும்,
காரைநகர்.


# எனது ஆட்சியில் எரிபொருள் விலை குறையும்

### அநுரகுமார உறுதியளிப்பு



(கொழும்பு)

தனது அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் எரிபொருள் விலை குறைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் 3 பில்லியன் டொலர் கடனைக் கொண்டிருந்ததாகவும், அதனை திறைசேரி பொறுப்பேற்றுள்ளதாகவும் அவர் விளக்கினார்.

இதன் விளைவாக, இந்தக் கடனை அடைக்க ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபாய் அமுல்படுத்தப்பட்டது.

கடன் கிட்டத்தட்ட முழுமையாக செலுத்தப்பட்டாலும், லீற்றருக்கு 50 ரூபாய் வசூலிப்பது தொடர்ந்து பொது மக்களுக்கு சுமையாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஒரு முழுமையான மறு ஆய்வு நடத்தி, அதன்படி எரிபொருள் விலையை குறைக்கும் என்று அவர் உறுதியளித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## உடையார்கட்டு மகாவித்தியாலயம் குத்துச் சண்டையில் சம்பியனானது



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டை போட்டியில் உடையார்கட்டு மகா வித்தியாலயம் பெண்கள் பிரிவில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்ததோடு 8 பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.கலைநிலா தங்கப் பதக்கத்தையும், ஆர்.டிலக்சிகா மற்றும் ரி.பிரியசி ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். ஆண்கள் பிரிவில் பி.மதுசன் தங்கப்பதக்கத்தையும், ரி.தனுசன், எஸ்.கிரி, கே.புகழ்மறவன், எஸ்.கஜந்தன் ஆகியோர் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

## பெண்களுக்கான கால்பந்தாட்டம் வெற்றிவாகை சூடியது மகாஜன




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து வ/கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (நி-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3200

### கார்த்திகேயன்

புருஷங்க ஆயுள் நீடிக்க சுமங்கலி விரதம், திருவாதிரை விரதம் இருந்து பிரயோஜனம் இல்ல...



மௌன விரதம் இருந்து பாருங்க நூறு வருடம் என்ன ஆயிரம் வருடம் உயிரோடு இருப்பான்....

### அக்ஷயன்

"டாக்டர்! காது கேட்கலேன்னு வந்த என் மனைவிக்கு நீங்க மருந்தை ஓவர் டோசக கொடுத்திட்டீங்களா?"

"ஏன், என்னாச்சு?"

"நான் அவளை 'மைண்ட் வாய்ஸ்ல' திட்டினா கூட கேட்டுட்டு வந்து அடிக்கிறா டாக்டர்!"

### கிஷாளினி




### டர்சிகா

"நாலு வகை சட்டினி தினமும் கிடைக்கும்" என எதிர்பார்ப்பில் ஆரம்பித்து, "நாலு நாளா ஒரே சட்டினியை வச்சு சாப்பிடும்" யதார்த்தத்திற்கு பெயர்தான். "திருமணம்".

### மயூரன்

காதலில் வெற்றி பெற்றவர்க்கு மட்டுமே தெரியும்



தான் பெற்ற வெற்றி எவ்வளவு கொடுமையானது என்று

### டஜின்

ஏழு ஜென்மத்திலும் நான் தாங்க உங்களுக்கு பொண்டாட்டி.




எதுக்க வீடு கூட்டுறதுல இருந்து கதவு பூட்டுறது வரைக்கும் எல்லாத்தையும் என்னையே செய்ய சொல்லுறதுக்கா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் 6 ஆம் நாள் திருவிழாவில் மூளாயூர் தண்ணுவேந்தன் மா.சிதம்பர நாதனின் மாணவர்களின் தனி ஆவர்த்தன இசைக்கச்சேரி அண்மையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ப.விக்னேஸ்வரன், ப.சாரங்கன், அ.சங்கரன், சு. கார்த்திகன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.




# கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.04/2024 இற்கு அமைவாக, 39ஆவது கலாபூஷணம் அரச விருது விழா-2023 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

2023.12.31 ஆம் திகதிக்கு 60 வயது நிறைவடைந்த, மூத்த கலைஞர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

"39 ஆவது கலாபூஷணம் அரச விருது விழா-2023 தொடர்பில் , கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை இல. 04/2024 இற்கு அமைவாக, இணைப்பு- 2, இணைப்பு-3 ஆகிய படிவங்களைப் பூரணப்படுத்தி, பிரதேச செயலாளரின் சான்றுப் படுத்தலுடன், பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உரிய ஆவணங்களின் பிரதிகள், விண்ணப்பதாரியின் புகைப்படங்கள் 3 என்பவற்றை தயார்படுத்தி எதிர்வரும் 2024.08.22 ஆம் திகதிக்கு முன்னர் தத்தம் பிரதேச கலாசார அபிவிரத்தி உத்தியோகத்தர்களைத் தொடர்புகொள்ளுமாறும்.

விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களிலும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முகநூல் பக்கம் Department of Cultural Affairs மற்றும் www.culturaldept.gov.lk என்ற இணையத்தள முகவரியிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (நி-6)

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/இராமநாதன் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 தொடக்கம் பி. ப 1.30 மணிவரை கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி. அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக (Attorney-at-law, Advocate of the supreme Court of Srilanka) Council member, university or Jaffna திருமதி. மனோகரி இராமநாதன். சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவி திருமதி. ஞானநாயகி உதயகுமார் (லண்டன்), பழைய மாணவி திருமதி. சுஜிந்தா பிரதாபன் (பிரான்ஸ்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# ஐ.ம.ச காரியாலயம் முல்லையில் திறந்து வைப்பு

(நெளுக்குளம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் மாங்குளம் கிழவன் குளத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் மாவட்ட காரியாலய திறப்பு விழாவானது திருமுறிகண்டி வட்டார வேட்பாளர் சுப்பையா திருச்செல்வம் தலைமையில்இடம்பெற்றது.(நி-6-299)

# முத்துக் குடைகள்

முத்தான முத்து குடைகள் ஆட ஆட
காதிலே குண்டலங்கள் ஆட ஆட
மார்பினிலே பதக்கங்கள் ஒலித்து ஆட
அடியார்கள் கண்களும் சிமிட்டி ஆட
சுமந்து வரும் வண்ண மயிலும் ஆட
மயிலின் காலடி பாம்பும் ஆட ஆட
அடியார்கள் பக்தி மேல் ஆட ஆட
பஜனை பாடுவோரும் பாடி ஆட
திருவீதி எங்கும் கலகலத்து ஆட ஆட
நீயும் பாடிப்பாடி ஆடி வாராயோ
நல்லை கந்தவடி வேலனே ஆடாயே

கலாபூசணம்,திருமுருகன்.

# நல்லைக் கந்தவேளே!

ஆதியிலை அந்தமிலை யருவமிலை யுருவமிலை
அளந்துசொல வுவமையிலையே
பாதிமதி யார்சிவனின் படருவிழிப் பொறியுதித்து
பரமகுரு வானமறையே
ஏதமில்லைப் பேதமில்லை யெங்கும் விரிமூலமென
இலங்கிடும் இன்பவிறையே
நாதவடி வானதொரு வேதமதில் சேர்ந்ததிரு
நதிநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

20.08.2024
ஆவணி 04, செவ்வாய்க்கிழமை
பிரதமை முன்னிரவு 11.02 மணிவரை

அவிட்டம் முற்பகல் 7.59 மணிவரை
சுபநேரம் -10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை.

வளவன்



மேஷம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.



துலாம்

வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும் நாள்.



மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



ரிஷபம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும்.



சிம்மம்

தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், வெளியூர் பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.



விருச்சிகம்

சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், வாகன சுகமுண்டு, கௌரவமான நாள்.



கும்பம்

நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்.



மிதுனம்

வேலைச் சுமை குறையும், பகை விலகி பாசம் கூடும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.



கன்னி

தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.



தனுசு

பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், வியாபார விரோதம் விலகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



மீனம்

எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

அகந்தை முன்னால் செல்லும், அவமானம் பின்னே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியானின் தீர்த்தத்திருவிழா




வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள், செதில் காவடிகள் எடுத்தும் பெண் அடியவர்கள் பாற்காவடி எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்ததுடன் பெருமளவான அடியவர்களும் கலந்து கொண்டனர்.

(படங்கள்- சிவசாந்தன்)

# கொக்குத் தொடுவாய்

## புதைகுழி முன்பாக போராட்டம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

(நெளுக்குளம்)

கொக்குத் தொடுவாய் புதைகுழிக்கு முன்பாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள் ளனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே முல் லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளின் சங்கத்தலைவி மரியே சுரேஸ் ஈஸ்வரி தெரிவித்தார்.

ஓ எம் பி அலுவலகத்தின் செயற்பாடுகள் தமக்கு எதிராகவும் அரசாங்கத்தை காப்பாற்றும் வகையிலும் அமைந்திருப்பதாகவும் கொக்குத்தொடுவாய் புதைகுழி மூடப்பட்டமை தமக்கு அதிர்ச்சி அளிப்பதாகவும் இந்தப் புதைகுழியைச் சூழ பல மனித எச்சங்கள் மேலும் இருக்கின்றன என்று தமக்கு தெரிய வருவதாகவும் இங்கு கருத்து வெளியிடப்பட்டது.

அத்துடன் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமக்கு எந்தவிதமான கரிசனையும் இல்லை என்ற வகையிலும் இது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்தப் போவதில்லை என்றும் இச் செயற்பாடுகளை கண்டித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். (நி-6-299)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ் தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- சற்குருணராஜசர்மா யதுர்சன், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்- அ. அமிர்தலோஜனன், கஞ்சிரா-பு.வேணுகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணி வரை இடம் பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-வைஷாலி யோகராஜன், வயலின்- இ. நிரோஜன்,மிருதங்கம்-சு. கமலதாஸ், முகர்சிங்-யோ.கௌமாரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# தென்மராட்சி பிரதேச செயலக

## பண்பாட்டுப் பெருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும், தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வரணி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலாளரும் கலாசாரப் பேர வைத் தலைவருமான திரு மதி. உஷா சுபலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினர்களாக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி.லாகினி திருபிரகாஷ் மற்றும் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் சாவகச்சேரி பிர தேசசபையின் செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட சிரேஷ்ட கலாசார உத் தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம், கலாபூஷணம் கந்தையா சந்திரகேது ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கலைச்சாகரம் மற்றும் இளம் கலைஞர் விருது களும் வழங்கி கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (நி-6)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் வியாழக் கிழமை மாலை 6.20 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 3303371


# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 08 - 1944



உதிர்வு 17 - 08 - 2024

## திருமதி.சின்னத்துரை தவமணி

பலாலியைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம் புதுக்காடு இல: 17 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பெரியக்கா என செல்லமாக அழைக்கப்படும் திருமதி. சின்னத்துரை தவமணி அவர்கள் 17.08.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- வள்ளிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் லட்சுமியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார் (பெரிய தம்பி), பிறேமகுமார் மற்றும் ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் ( canada), சித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும்.உதயசாந்தி ( canada), சகுந்தலாதேவி (france), விமலபாலன் (லவன்) (france),ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடராஜா, சின்னத்தங்கம், சுப்பிரமணியம் மற்றும் சின்னத்துரை (கிளிநொச்சி), இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும்

பிரஷாளினி, ஷயனவி, தனுஷாரணி, மயூரிகா, அக்ஷயா(canada) அஸ்விதன், வைஷ்ணா (france) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 20.08.2024 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 2 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இராமநாதபுரம், புதுக்காடு தகவல்- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக் கேள்விக்கான கோரல் (2024/01)
## வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு

1. வலயக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
   "இவ் பெறுகை நடைமுறையில் ஒவ்வொரு திட்டத்தினதும் மொத்த செலவு மதிப்பீடு ரூபா. 50 மில்லியனுக்கு குறைவாக இருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச்சுற்றறிக்கை இல. 04/2016 (iii) இல் நிர்ணயிக்கப்பட்டபடி வழங்கப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (SBD III) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள், கீழே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **வலயக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு (தொலைபேசி இல: 021 229 0015, தொலைநகல்- 021 229 0017) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் மு.ப 10.30 மணிக்கு அல்லது **அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாநாட்டு மண்டபம், வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு முகவரியில் மு.ப 10.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் நாட்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வகை I | கேள்வி ஆவணம் வழங்கும்/ பெற்றுக்கொள்ளும் காலம் | | | | 2024.08.20 முதல் 2024.08.30 வரை | | | | |
| | கேள்வி தொடர்பான முதற் கூட்டம் | | | | 2024.08.22 அன்று மு.ப 10.30 | | | | |
| | கேள்வி மூடுதல்/ திறத்தல் | | | | 2024.09.02 அன்று மு.ப 10.30 | | | | |
| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) வரி நீங்கலாக | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக் கப்படாத தொகை | செல்லு படியாகும் காலம் | கேள்விப் பிணை விபரம் தொகை | கேள்விப் பிணை விபரம் தேவைப்படும் காலம் |
| NP/ZEO/ MU/PSDG/ 2024/01 | மு.கைவேலி கணேசா வித்தியாலயம் பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்துடன் கூடிய வகுப்பறைக்கட்டிடம் (120'X25') நிர்மாணித்தல் (தொடர் வேலை) | PSDG | 0.93 | 60 நாட்கள் | C9 and C8 (கட்டடங்கள்) | 1,500.00 | 49 நாட்கள் | 9,000.00 | 16/11/2024 |
| NP/ZEO/ MU/PSDG/ 2024/02 | மு/ திம்பிலி ஆரம்ப பாடசாலையின் வகுப்பறைக் கட்டிடம் (120'X 25') நிர்மாணித்தல் (தொடர் வேலை) | PSDG | 3.05 | 60 நாட்கள் | C8 and C7 (கட்டடங்கள்) | 2,000.00 | 63 நாட்கள் | 30,500.00 | 30/11/2024 |
| NP/ZEO/ MU/PSDG/ 2024/03 | மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம் பாடசாலையின் வகுப்பறைக்கட்டிடம் (100'X25') நிர்மாணித்தல் (தொடர் வேலை) | PSDG | 2.17 | 60 நாட்கள் | C8 and C7 (கட்டடங்கள்) | 2,000.00 | 63 நாட்கள் | 21,700.00 | 30/11/2024 |
| NP/ZEO/ MU/PSDG/ 2024/04 | மு/ஆனந்தபுரம் அ.த.க பாடசாலையின் வகுப்பறைக் கட்டிடம் (120'X25') நிர்மாணித்தல் (தொடர் வேலை) | PSDG | 1.75 | 60 நாட்கள் | C9 and C8 (கட்டடங்கள்) | 1,500.00 | 49 நாட்கள் | 17,500.00 | 16/11/2024 |
| NP/ZEO/ MU/PSDG/ 2024/05 | மு/தண்ணீரூற்று இ.த.க பாடசாலையின் வகுப்பறைக் கட்டிடம் (2X50'X25') நிர்மாணித்தல் (தொடர் வேலை) | PSDG | 1.91 | 60 நாட்கள் | C9 and C8 (கட்டடங்கள்) | 1,500.00 | 49 நாட்கள் | 19,100.00 | 16/11/2024 |
| NP/ZEO/ MU/ Ministry/ 2024/01 | ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி நிலையம் முல்லைத்தீவு திருத்தவேலை | Line Ministry | 2.33 | 60 நாட்கள் | C8 and C7 (கட்டடங்கள்) | 2,000.00 | 63 நாட்கள் | 23,300.00 | 30/11/2024 |

(சி-1012)

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.**

# மன்னார் சோழ மண்டல குள காணி விவகாரம்
## ஜனாதிபதிக்கு பொது அமைப்புக்கள் கடிதம்

(மன்னார்)

மன்னார் சோழமண்டல குளம் காணியில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் ஏழை விவசாயிகள் ஏமாற்றப்பட்டுள்ளதோடு பணம் படைத்தவர்களுக்கு குறித்த காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மன்னார் சோழ மண்டல குள காணி விடயம் தொடர்பாக பல முறை உங்களுக்கு கடிதம் எழுதி பயனற்றதாகிவிட்டதாகவும் இவ்விடயம் தொடர்பில் அரசாங்க அதிபர் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பல தடவைகள் எழுத்து மூலமும் நேரடியாகவும் தெரிவித்துள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்காக பல கூட்டங்களும் நடந்தேறியதாகவும், ஆனால் எங்கும் நீதி கிடைக்கவில்லை என்பதுடன் ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கான காணியை அபகரித்தது அடிப்படை உரிமை மீறல் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாழ்வுரிமையின் அடிப்படை உரிமையை மறுக்கும் இந்த நாட்டின் நீதியற்ற நிர்வாகவியலின் ஜனாதிபதித் தேர்தலை முழுமையாக புறக்கணிப்பதாகவும், எந்த வேட்பாளருக்கும் நாம் வாக்களிக்கத் தயாராக இல்லை எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-285)

# தேர்தல் கடமைகளுக்கு
## 200,000 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கடமைகளுக்காக 200,000 முதல் 225,000 வரையிலான அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 13,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனைத்து வேட்பாளர்களுக்கும் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-6)

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின்
# கண்ணீர்ப் பூக்கள்



"கலைப்பிரியன்"

அமரர்.**நவரத்தினம் தர்மராசா** (MGR)

பல வருடங்களாக ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்கு வரவழைக்கப்படும் இந்திய பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள், ஈழத்துப் பிரபல கலைஞர்களுடன் இணைந்து பல நிகழ்வுகளை எமது கலாமன்றத்தில் ஆற்றி கலைவளம் பெருகுவதற்கு பெரும் பங்காற்றியதோடு பல சந்தர்ப்பங்களில் தனது தியாகங்களுக்கு மத்தியில் பிரபல மற்றும் வளரும் கலைஞர்களுக்கு கௌரவம் வழங்கி அவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு அளப்பரிய பங்காற்றி கலைச் சேவையில் மறைக்கவோ மறுக்கவோ முடியாத அளவிற்கு தன்னை கலைக்கு அர்ப்பணித்த "கலைப்பிரியன்" அமரர்.நவரத்தினம் தர்மராசா (MGR) அவர்களின் இழப்பு ஈழத்தின் கலைச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது இழப்பினால் தவிக்கும் குடும்பத்தினருக்கும் கலைஞர்களுக்கும் கலைச் சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் குஞ்சித பாதத்தில் இளைப்பாற மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ் கிளை

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நியூயோர்க்கில் ராமர் கோவில் தேர் பவனி களைகட்டிய இந்தியர்களின் கொண்டாட்டம்



(நியூயோர்க்)

நியூயோர்க்கில் அயோத்தி ராமர் கோவில் போன்ற வடிமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி அணிவகுப்பை நடத்தி வெளிநாடுவாழ் இந்தியர்கள் சுதந்திர தின விழா கொண்டாடினர்.

உத்தரபிரதேசம் மாநிலம் அயோத்தியில் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு ராமர் கோவில் மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்டது. இதனை பிரதமர் மோடி கடந்த ஜனவரி மாதம் திறந்து வைத்தார். இது ஹிந்துக்களின் அடையாளம் என்று உலகம் முழுவதும் பாராட்டுப் பெற்றுள்ளது.

இந்த நிலையில், நியூயோர்க் நகரில் இந்திய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இந்திய சுதந்திர தின விழா பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், 40 இற்கு மேற்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில் 40 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பங்கேற்று, நகரை வலம் வந்தன. குறிப்பாக, 19 அடி நீளம், 9 அடி அகலம், 9 அடி உயரம் கொண்ட அயோத்தி ராமர் கோவில் போன்ற வடிவமைப்பு கொண்ட வாகனமும் இடம் பெற்றிருந்தது.

இந்த ராமர் கோவில் போன்ற வடிவமைப்பு இந்தியாவில் உருவாக்கப்பட்டு, விமானம் மூலம் நியூயோர்க்கிற்கு கொண்டு செல்லப்பட்டதாகும். இந்த ஊர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக ஹிந்தி நடிகை சோனாக்ஷி சின்ஹா, பன்கஜ் திரிபாதி ஆகியோர் பங்கேற்றனர்.

மதப்பாடல்கள் ஒலிப்பரப்பட்டு, இசைக்கருவிகள் இசைக்க, மக்கள் ஆட்டம், பாட்டத்துடன் உற்சாகமாகக் கொண்டாடினர். (நி-6)

## வேலை போச்சா, கவலை வேண்டாம் நாங்கள் தருவோம் 6 ஆயிரம் டொலர்

### சூப்பர் திட்டம் அறிவித்தார் சிங்கப்பூர் பிரதமர்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் வேலை இழந்தோருக்கு உதவி செய்யும் வகையில், 6 மாதங்களுக்கு 6000 சிங்கப்பூர் டொலர் வரை நிதியுதவி வழங்கப்படும் என அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ் வோங் அறிவித்துள்ளார்.

கொவிட் பாதிப்பு, சர்வதேச அளவில் தொழில் மந்த நிலை காரணமாக, சிங்கப்பூர் நாட்டில் பலருக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி வழங்கும் வகையில் "ஸ்கில்ஸ்பியூச்சர்" ஆதரவுத் திட்டத்தை அரசு தயாரித்துள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 6 மாதங்களுக்கு 6000 சிங்கப்பூர் டொலர் வரை நிதியுதவி வழங்கப்படும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் அல்லது தங்கள் நிறுவனங்கள் நஷ்டம் அடையும் போது வேலை இழப்பவர்களுக்கு இந்த திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும்.

இந்த ஆண்டின், தேசிய தினப் பேரணியில் பிரதமர் லாரன்ஸ் வோங் பேசியதாவது, வேலையை இழந்தோருக்கு ஸ்கில்ஸ்பியூச்சர் ஆதரவுத் திட்டத்தின் கீழ் ஆறு மாதங்கள் வரை நிதியுதவி வழங்க உள்ளோம். இந்த பணம் அவர்கள் வேலை தேடுவதற்கும் தொழில் பயிற்சி மேற்கொள்வதற்கும் உதவிகரமாக இருக்கும். நாங்கள் உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்போம்.

சில நாடுகளில் வேலையில்லாதோருக்கான காப்புறுதித் திட்டம் செயற்பாட்டில் இருக்கிறது. அதைவிட சிறப்பாக செய்ய சிங்கப்பூர் அரசு விரும்புகிறது. ஸ்கில்ஸ் பியூச்சர் திட்டம் குறித்து விவரங்களை, விரைவில் மனிதவள அமைச்சர் டான் சீ லெங் வெளியிடுவார் என அவர் தெரிவித்தார். (நி-6)



## அச்சுறுத்தும் குரங்கம்மை அதிகரிக்கும் உயிரிழப்புக்கள்!

(கொங்கோ)

கொங்கோ குடியரசில் எம்பொக்ஸ் எனப்படும் குரங்கு அம்மைத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 548 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் இத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 15, 664 ஆக அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நோயினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெறுவதற்குப் பதிலாக மத ஸ்தலங்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை மேற்கொள்வதால் நோய் பரவல் அதிகரித்து வருவதாக அந்நாட்டின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மன்னித்தார் மன்னர்; தப்பினார் தக்சின்

### தாய்லாந்தில் இதெல்லாம் சகஜம் என்கின்றனர் விமர்சகர்கள்



(பாங்கொக்)

தாய்லாந்தின் மன்னர் மகா வஜிரலோங்கோர்னின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்து, செல்வச்செழிப்பு மிக்கது உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப்பயணிகள் விரும்பி வந்து செல்லும் நாடு. இந்த நாட்டின் பிரதமராக, 2001 முதல் 2006 வரை பதவி வகித்தவர் தக்சின் ஷினவத்ரா. தொலைத்தொடர்புத் துறை நிறுவன உரிமையாளர் பெரும் செல்வந்தர்.

இவரது பதவிக்காலத்தில், ஊழல் செய்ததாகவும், அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக, குற்றச்சாட்டு எழுந்து போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிலையில், ராணுவப்புரட்சி நடந்து, தக்சின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அவரது கட்சி தடை செய்யப்பட்டது. தக்சின் அரசியலில் ஈடுபடவும் தடை விதித்தது அரசு. கைது அச்சத்தில், வெளிநாட்டுக்கு தப்பியோடிய தக்சின், கம்போடியா உள்ளிட்ட நாடுகளில் 15 ஆண்டுகள் தங்கியிருந்தார்.

வெளிநாட்டில் இருந்தாலும், தாய்லாந்து அரசியலில் தக்சினின் கையே ஓங்கி இருந்தது. 2011 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில், அவரது இளைய சகோதரி இங்லக் ஷினவத்ரா பிரதமர் ஆனார். இருந்தபோதும், அவர் வெளிநாடுகளிலேயே தங்கி இருந்தார். கால மாற்றத்தில் அவருக்கு மீண்டும் தாய்நாடு வரும் வாய்ப்பு உருவானது.

2023ஆம் ஆண்டு தேர்தலில், அவரது தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வரும் சூழல் உருவான நிலையில், தக்சின் நாடு திரும்பினார். வந்தவுடன் அவர் மீதான பழைய வழக்குகளில் விதிக்கப்பட்டிருந்த 8 ஆண்டு சிறைத்தண்டனைக்காக கைது செய்யப்பட்டார். சிறை சென்ற சில நாட்களிலேயே உடல் நலமில்லை என்று கூறி மருத்துவமனைக்கு வந்து விட்டார். அங்கேயே தொடர்ந்து இருந்த நிலையில், தண்டனை ஓராண்டாக மன்னரால் குறைக்கப்பட்டது. இதற்கிடையே, விதிமுறைகளை மீறியதாக கூறி, அந்நாட்டு அரசியலமைப்பு நீதிமன்றம், தாய்லாந்து பிரதமர் ஸ்ரெத்தா தவிசினை பதவி நீக்கம் செய்தது. புதிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தக்சினிடம் வந்தவுடன், தன் இளைய மகளை பதவிக்கு கொண்டு வர முடிவு செய்தார். அதன்படி அவரது இளைய மகள் பேடோங் டர்ன் ஷினவத்ரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந் நிலையில் தான், முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவுக்கு அரசு மன்னிப்பு கிடைத்துள்ளது எனது அவரது வழக்கறிஞர் தெரிவித்தார். மன்னரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக ஊழல் வழக்குகளுக்காக விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்து தக்சின் ஷினவத்ரா விடுவிக்கப்படுவார் எனக் கூறப்படுகிறது. தாய்லாந்து அரசியலில் இத்தகைய திடீர் திருப்பங்கள் எல்லாம் சகஜம்ப்பா என்கின்றனர், விமர்சகர்கள். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடைந்து வரும் மக்கள் போராட்டம்

# வெனிசுலாவில் பதற்றம்!

(கராகஸ்)

**வெனிசுலாவில் கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நிக்கலோஸ் மதுரோ வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.**




இந்நிலையில் நேற்று முன் தினம் வெனிசுலா தலைநகரில் அதிகளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பு மேலும் அதிகரித்துள்ளது.

வெனிசுலாவில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் சர்ச்சைக்குரிய வெற்றிக்கு எதிராக வெனிசுலா முழுவதும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மக்களுடன் இணைந்து போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ தலைமறைவாக இருந்த நிலையில் தற்போது ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களுடன் இணைந்து போராட்டங்களை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் வெனிசுலா தலைநகரில் இருந்து வெளியேறப்போவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ குறிப்பிட்டுள்ளார்.

மக்களை திரட்டி நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ள மதுரோவின் ஆதரவாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பொலிஸாரும் இராணுவமும் சம்பவ இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் வெனிசுலாவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற நிலையில் நிக்கலோஸ் மதுரோ வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் 51.02 வீத வாக்குகளை மதுரோ பெற்றுள்ளதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட பிரதான வேட்பாளர் 44.02 வீத வாக்குகளை பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

எனினும் வாக்குகளை எண்ணுவதில் மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

மேலும் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ள நிக்கோலஸ் மதுரோவின் வெற்றியை அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் ஏற்காத நிலையில் மதுரோவுக்கு ரஷ்யா, சீனா, கியூபா உள்ளிட்ட நாடுகள் வாழ்த்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 630,000 டொலருக்கு ஏலம் போன தொப்பி



(லண்டன்)

1984 ஆம் ஆண்டு வெளியான "இண்டியானா ஜோன்ஸ் அண்ட தி டெம்பிள் ஆஃப் டூம்" திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட தொப்பி சுமார் 630,000 டொலருக்கு ஏலம் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லண்டனில் உள்ள ஹெர்பர்ட் ஜோன்சன் நிறுவனத்தால் இத்தொப்பி வடிவமைக்கப்பட்டது.

மேலும் இந்த தொப்பி, முயல்களின் மென்மையான ரோமங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டதாகக் குறிப்படுகிறது. (நி-6)

# போரை நிறுத்துவது தொடர்பில் பிளிங்கன் இஸ்ரேல் விஜயம்



(காசா)

காசாவில் இடம்பெறும் இப்போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங் கன் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இஸ்ரேல் - காசா போர் நிறுத்த கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ள நிலையில், அமெரிக்காவின் ஆதரவுடனான போர்நிறுத்த பேச்சுவார்த்தைக்காக அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது அன்டனி பிளிங்கன் இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாகுவையும் ஏனைய இஸ்ரேலிய தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த சந்திப்பின் பின்னர் பிளிங்கன் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்கு பயணிக்கவுள்ளார் எனவும், அங்கு எகிப்திய தலைவர்களுடன் போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் மத்திய கிழக்கிற்கு ஒன்பதாவது முறையாக பயணத்தை மேற்கொள்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து அடைந்த வேளை சஜித், அநுர எங்கே?

## ஜனாதிபதி ரணில் கேள்வி



(கொழும்பு)

நாடு நெருக்கடியில் இருந்த வேளை சஜித்தும் அநுரவும் எங்கு இருந்தனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இயலும் ஸ்ரீலங்கா கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் இடம் பெற்றிருந்தது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது, கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்று கூடவில்லை. கட்சிகள் ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம்.

எம்மை ஆசீர்வதிக்கவே மழையும் பெய்தது. அதனால் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டிடுகிறேன். மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில் முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர்.

அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது.கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது.

அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். காஸ் இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம்.மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்க்கட்சித் தலைவர் ஓடிவிட்டார், அநுரகுமார திசாநாயக்கவை காணவே முடியவில்லை. இந்த காலப்பகுதியில் மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டனர்.

அப்போது சஜித்தும், அநுரவும் எங்கு இருந்தனர்? மக்களின் கஷ்டம் புரிந்திருந்தால் அன்று ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும்.

எதிர்கட்சி எந்த வேளை யிலும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும். இல்லா விட்டால் இரண்டாம் எதிர்கட்சி ஏற்க வேண்டும். அவர்கள் எங்கு இருந்தனர்? இவ்வாறு ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 300 | 250 |
| தக்காளி | 250 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 250 | 200 | 200 |
| கோவா | 300 | 320 | 300 | 350 |
| கரட் | 300 | 350 | 380 | 350 |
| பூசணி | 150 | 140 | 140 | 150 |
| புடோல் | 80 | 150 | 150 | 150 |
| வாழைக்காய் | 300 | 300 | 250 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250-400 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 220 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 320 |
| வெண்டக்காய் | 150 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 350 |
| பீற்றூட் | 200 | 300 | 300 | 200 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 180 | 150 |
| போஞ்சி | 550 | 650 | 500 | 700 |
| கத்தரி தம்புள்ள | 150 | 100 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 450 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 900 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 200 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 |

# இன்று ஒரு தகவல் 215



தென்கச்சி கோ. சுவாமிநாதன் நன்

## நல்ல பெயர் வாங்குவது எப்படி?

நான் நிறைய நல்ல காரியம் எல்லாம் செய்து கொண்டிருக்கின்றேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை என்றார் ஒருவர். என்ன குறை என்று கேட்டார் இன்னொருவர். என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை. அது தான் குறை என்றார் அவர். நல்ல செயல்களைச் செய்வது என்பது வேறு நல்லவன் என்று பேர் எடுப்பது வேறு.

நல்ல பேர் வாங்குவது என்பது சும்மாவா? அது சரி எல்லோரிடமும் நல்ல பேர் வாங்குவது எப்படி? இதற்கு ஒரு அனுபவசாலி (டேல் கார்னர்) சில வழிகளைச் சொல்கின்றார். அப்படியாவது நல்ல பேர் வாங்க முடிகின்றதா என்று பார்ப்போமே என்ன சொல்கின்றீர்கள். அவர் முக்கியமாக இதற்கு ஒரு எட்டு வழிகளைச் சொல்கின்றார். எது எது நம்மாலே முடியாதோ அந்த வழியிலேயெல்லாம் போய் பார்க்கலாமே.

அவர் சொல்கின்ற முதல் வழி. மற்றவர்களை உண்மையாகவே பாரட்டுவதற்கு பழக வேண்டும் என்கின்றார். எங்களில் பல பேர் எப்படி என்றால் அடுத்தவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களை பாரட்டுவதற்குப் பதிலாக அவர்கள் மேலே பொறாமைப் பட ஆரம்பித்து விடுகின்றோம். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கின்றோம்.

அதனாலே நம்முடைய பேரும் கேட்டுப் போகின்றது. உடம்பும் கேட்டுப் போகின்றது. பிறர் மேலே உண்மையாகவே அக்கறை கொள்ள வேண்டும் என்பது இரண்டாவது வழி. உங்களுக்குப் பக்கத்திலே இருப்பவர்களுக்கு லேசாக தலைவலி. அதற்கு உங்களிடம் மாத்திரை இருக்கின்றது. அப்படி இருந்தால் அதிலே ஒன்றை கொடுத்து உதவுங்களேன் என்ன குறைந்து விடப்போகின்றது.

ஒருக்கால் அந்தத் தலைவலியே நீங்கள் பக்கத்திலே இருப்பதாலே கூட அவருக்கு வந்திருக்கலாம். அடுத்தவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்கள் என்றால் அதை மறைமுகமாக சுட்டிக் காட்ட வேண்டும். அய்யய்யோ இப்படி செய்து விட்டீர்களே என்று ஆரம்பிக்கக்கூடாது.

தவறு என்பது திருத்திக் கொள்ளக்கூடியது தான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும். பரவாயில்லை இனிமேல் இது மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லவேண்டும்.

உங்களுக்கு எதிரிலே இருப்பவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவரும் முக்கியமானவர் தான் என்பதை அவரே உணருகின்ற அளவிற்கு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

அதற்கு என்ன செய்யலாம். அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேட்டுக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேளுங்கள். என்னங்க நான் சொல்வது சரிதானா? என்று கேளுங்கள்.

அவரையும் பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்காதீர்கள். அவர் பேசுவதையும் பொறுமையாகக் கேளுங்கள். அப்போது தான் உங்கள் மீதும் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டிருக்கின்றீர்கள். அது மாதிரி வாக்குவாதத்திலேயிருந்து சிறந்த பலன் பெற வேண்டும் என்றால் அதிலேயிருந்து ஒதுங்குவது தான் நல்ல வழியாம். நழுவுகின்றதற்கு நமக்கு சொல்லியா கொடுக்க வேண்டும். அது தான் நமக்கு கைவந்த கலையாச்சே.

இன்னொரு விடயம் என்னவென்றால் அடுத்தவர்களை மகிழ்ச்சியடைய வைப்பதன் மூலமாக நாங்களும் மகிழ்ச்சியடைகின்றோம் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சில பேருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கை பார்க்கின்றதிலேயே ஒரு தனி சுவாரஷ்யம் அது எல்லாம் மிகவும் தவறு.

அப்புறம் இன்னொரு முக்கியமான விடயம். ஒருவருக்கு அவருடைய பெயர் மட்டும் தான் அவரை பொறுத்தவரைக்கும் மிக இனிமையான வார்த்தை என்பதை ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டுமாம்.அதானலே அவர்கள் பெயரை எழுதுகின்ற போதும் சொல்கின்ற போதும் சரியாக எழுத வேண்டும். சரியாகச் சொல்லவேண்டும். அது அவர்களுக்கு சந்தோஷமாக இருக்கும்.

நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதற்கு ஒரு வெளிநாட்டு நிபுணர் சொல்லியிருக்கின்ற யோசனைகள் இவ்வளவும். இதை இன்றைக்கு உங்களிடம் சொல்வதற்கு முன்னர் இன்னொருவரிடம் சொல்லியிருந்தேன். அந்த அம்மா ஒரு நான்கு நாள் கழித்து கோபமாக என்னிடம் வந்தார்.

சார் நீங்கள் சொன்ன யோசனைகளிலே ஒரு விடயம் மட்டும் கடைப் பிடித்துப் பார்த்தேன். அதனாலே எனக்கு நல்ல பெயர் வரவில்லை. கெட்ட பெயர் தான் வந்தது என்றார்கள்.

என்ன செய்தீர்கள் என்றேன். என் வீட்டுக்காரரை அவர் பெயரைச் சொல்லி கூப்பிட்டேன் என்றார். நமது பழக்கவழக்கத்திற்கு அது சரி இருக்காதே என்றேன்.

அவர் பெயரைச் சொன்னதனால் கூட அவருக்கு வருத்தமில்லை.அதை செல்லமாக சுருக்கிக்கூப்பிட்டேன். அது தான் அவருக்கு வருத்தமாம் என்றார். அவருடைய முழுப்பெயர் என்ன? என்று கேட்டேன் மாடசாமி என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேதமடைந்துள்ள நீர்ப்பாசன வாய்க்கால்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் முதன்மை வாய்க்கால்கள் மிக மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

2010 ஆம் ஆண்டில் ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் ரூபா.350 மில்லியனில் அக்கராயன் குளத்தின் அணைக்கட்டு வான் பகுதிகள் புனரமைக்கப்பட்டதுடன் இடது, வலது கரை வாய்க்கால்களில் முக்கிய இடங்களில் கொங்கிறீட் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் குளத்தினையும் வாய்க்கால்களையும் புனரமைப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா.1,000 மில்லியன் நிதி தேவைப்படுவதாக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில் 14 ஆண்டுகளில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற சிறியளவிலான நிதியில் சிறிய வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அக்கராயன் குளத்தின் முதன்மை வாய்க்கால்கள் புனரமைக்கப்படாததன் காரணமாக பல இடங்களில் நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்திருப்பதன் காரணமாக தற்போது சிறு போகத்தில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லினை கூட வயலில் இருந்து வீடுஇகளுக்கு எடுத்து வர முடியாத அளவிற்கு வீதிகளும் வாய்க்கால்களும் சேதமடைந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-6-350)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளும் இசை விழாவும் கடந்த வாரம் வித்தியாலயபதில் அதிபர் எஸ். சுகந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளான சிறுவர் நாடகம், நடனங்கள், வில்லுப்பாட்டு, கவிதை, பேச்சு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

படம்: கிருஷ்ணகுமார்



# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...!

வழக்காளி
சோழியூரான் (சந்ததிப்பூசகர்)

இறை நீதிமன்றம் நீதியரசர்
பறாளாய் ஈசுர விநாயகர்

எதிராளி
ஸ்ரீலங்கா அரசு

ஈசுர விநாயகரிடம் மனுத்தாக்கல் செய்தமை (08.11.1991) ஆம் மனுவில் அன்றைய பிரதான கோரிக்கை, கொழும்பு அரசியலில் சூறாவளி ஏற்பட்டு பூகம்பமாக வெடிக்க வேண்டும்.

**என் அன்பு உள்ளங்களே!**

நாட்டிலே இனிமேல் என்ன நடக்கப் போகின்றது என்பவற்றையெல்லாம் விளக்கமாக (10.06.2024) வலம்புரிப் பத்திரிகையில் அடியேன் அறிவித்திருந்தேன். மேலும் எங்களுக்கு அமையப் போகும் ஆட்சி பற்றிய ஒரு கண்ணோட்டம்.அதாவது இத்தனை வருடங்களாக எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்து. எத்தனையோ உயிர்களை உயிருடன் தானம் கொடுத்து அங்கங்களையும் தானம் கொடுத்து. பல கோடி பொருளாதாரத்தை இழந்து மேலும் பசி பட்டினியால் வாடியும் மனிதரால் தீர்க்க முடியாத பிரச்சினையை இனிமேல் யார் தீர்க்கப்போகிறார்கள்? எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? ஆமாம் எவராலும் தீர்க்கவே முடியாது. இப் பிரச்சினை மனித சக்தியால் முடியாது. தெய்வீக சக்தியால் தான் முடியும் என்று 33 வருடங்களுக்கு முன்னர் (1991) அடியேன் எடுத்த முடிவை இப்போது ஈசுர விநாயகர் அனைத்து மக்களுக்கும் உணர்த்தி விட்டார். எனவே எங்களுக்கு அமையப்போகும் ஆட்சி ஈசுர விநாயகரின் திருவருளினால் மட்டும் தான் கிடைக்கும். அதற்குரிய சந்தர்ப்பம் சூழ்நிலைகளை அவரே உருவாக்கித் தருவார். தீர்த்துத் தான் இருப்பேன். என்று கூறியவர் கைவிடப் போவதில்லை. எங்களுக்கு அமையப் போகும் ஆட்சி ஒரு வகை சமஷ்டி முறை யான ஆட்சியாகும். (05.05.1994) இல் ஒரு மாடி வீட்டைக் காட்டியருளினார். அதாவது வடக்குக் கிழக்கு இணைந்த ஆட்சியாகும். அதனைக் கூட சிங்கள அரசியல் வாதிகளும் அரசும் ஒன்றும் எதுவும் செய்ய முடியாத ஒரு நிர்ப்பந்தத்தில் ஒரு போலியான தீர்வையே தருகின் றார்கள். ஆனால் ஈசுர விநாயகரோ அதனைத் தமிழ் மக்கள் சந்ததி சந்ததியாக ஆளக் கூடியதாக பலப்படுத்துகின்றார். இத் தர்சனத்தை அடியே னுக்கு தெளிவாகக் காட்டியருளினார். எனவே தெய்வ நிர்ப்பந்தங்களினால் தமிழ் மக்களுக்கு ஆட்சியுரிமை நிச்சயம் கிடைக்கும். ஈசுர விநாயகர் அதற்குரிய சந்தர்ப்பம், சூழ்நிலைகளை உருவாக் கியே தருவார். வடக்கு, கிழக்கு இணைப்பு என்பதற்கு அடையாளம் தான் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் கிழக்கிலே தெரிவு செய்யப்பட்டது. இதனை அனைத்து தமிழ் மக்களும் வரவேற்க வேண்டும். காரணங்கள் இல்லாமல் காரியங்கள் நடக்காது. நடப்பவை யாவும் நன்மைக்கே. என் இனிய நெஞ்சங்களே!

அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று நின்று அறுக்கும் என்பதற்கமைய ஈசுர விநாயகரும் தனது தர்சனங்களையெல்லாம் நடைமுறையில் நிரூபித்துக் காட்டியருளி திருவிளையாடல்களை நடாத்திக் கொண்டிருக்கின்றார். மேலும் இந் நேரத்தில் ஈசுர விநாயகர் நடைமுறையில் நிரூபித்து காட்டியருளிய தர்சனங்களில் முக்கியமானவற்றில் ஒரு சில தர்சனங்களின் கண்ணோட்டம்.....

(01) மேன்மை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் கழுத்தை தெய்வீகம் பிடித்துவிட்டது. என்ற கூற்று (25.04.1993)... ஒரு கிழமைக்குள் ஜனாதிபதி பிறேமதாசா அவர்கள் கொல்லப்படுகின்றார். உடனே மக்கள் எல்லோருக்கும் ஈசுர விநாயகரின் தெய்வீகத்தின் மேல் நம்பிக்கை [illegible] பத்ம வெளியீடு நம்பிக்கை நம்பிக்கை என்னும் பிரசுரம் ஈசுர விநாயகரின் குரல் என்று மாற்றம் பெற்றது.

(02)15.10.1995 யாழ் குடாவைவிட்டு அனைத்து மக்களும் அகதிகளாக இடம் பெயர்ந்து சென்ற போது நாம் தென்மராட்சி நுணாவில் மனம் கோணாப்பிள்ளையார் ஆலயத்தில் வசந்த மண்டபதிலே இருந்தோம் அங்கு ஈசுர விநாயகரை நினைத்து தினமும் தியானம் செய்து பிரார்த்தனை செய்து வழிபட்டு வந்தோம். இடம் பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் அனைவரும் தாங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல (யாழ்ப்பாணம்) அனுக்கிரகம் வேண்டி விடி விளக்குகள் ஏற்றிய போது யாழ் செல்வது நிச்சயம் என்று கூறியருளினார். உடனே பத்ம வெளியீடு ஈசுர விநாயகரின் குரல் 12 பிரசுரத்தில் யாழ் செல்வது நிச்சயம் என்று எல்லா மக்களுக்கும் அடியேன் அறியத் தந்திருந்தேன். அதன்படி ஒரு கிழமையில் சதுர்த்தி தினத்தில் யாழ் மண்ணில் காலடி வைத்து வந்து சேர்ந்தோம். இச் சம்பவத்தை யாழ் மக்கள் மறக்க மாட்டார்கள். மறக்கவும் முடியாது. ஈசுர விநாயகரின் திருவரு ளோடு வந்து சேர்ந்தமையால் பத்ம வெளியீடு ஈசுர விநாயகரின் குரல் ஈசுர விநாயகரின் அருட்குரல் என்று மாற்றம் பெற்றது.

(03) மேன்மை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் கண்ணைத் தாக்கி தான் தான் நாட்டுப் பிரச்சனைக்குரியவர் என்பதை நிரூபித்தவர். (கண்ணைக் கோதிய காக்காப் பிள்ளையார்)

(04) உங்களுக்கு எவருமே இல்லை என்ற கூற்றை வன்னி யுத்தத்தில் காட்டியருளினார்.

(05) ஆளில்லாத காரணத்தினால் நானே வருகின்றேன். என்ற கூற்று ஈசுர விநாயகரின் பிரதிநிதியாக விக்கினேஸ்வரன் ஐயாவின் வருகை இவற்றை விட எத்தனையோ சம்பவங்கள். ஈசுர விநாயகரின் தெய்வீகம் சொல்லில் அடங்குமா? சொல்லி முடியுமா? முக்கியமானவற்றுள் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுள்ளேன். இவையாவும் யாவரும்அறிந்ததே. இருந்தும் இந்தநேரத்தில் ஞாபகப்படுத்துவது எனது கடமை.

**இங்கேயும் தெய்வீகம்...**

நான் ஒருமுறை பாடசாலையில் தரம் 5 வகுப்பறையில் மாணவர்களுக்கு சமயபாடம் கற்பிக்கும் போது மாணவர்கள் அனைவரும் கற்றல் தொழிற்பாட்டில் மிகவும் அமைதியாகவும் அவதானத்துடனும் இருந்தனர். பின் வரிசையில் இருந்த ஒரு மாணவன் திடீரென மேலே முகட்டைப் பார்த்தவண்ணம் அமைதி குலைந்தவனாகக் காணப்பட்டான். இதை அவதானித்த நான் மாணவனிடம் என்னவென்று கேட்டேன். ஐயோ! சார் முகட்டில் பாம்பொன்று எலியின் வாலைப்பிடித்து விட்டது எலியோ திணறுகின்றது. என்று மாணவன் கூறியதும் வகுப்பறையில் ஒரே அமளி துமளி எழுந்து நின்று கூச்சல் போடுகின்றார்கள். மாணவர்களைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. பின்னர் பாம்பு மறைந்ததும் ஒருவாறு வகுப்பறையைக் கட்டுப்படுத்தி அமைதியைப் பேணினோம்.

"பாம்பென்றால் படையும் நடுங்கும்" தற்போதைய இந்திய இலங்கை நிலைப்பாடும் இந்நிலைப்பாட்டைபோன்றதே என்பதைப் புரிவோமாக! "பார் தெரியுது பறாளாயான் பதி பக்தர் குறை தீர்க்கும் பறாளாயான் சந்நிதி" சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகனை வணங்குங்கள். சதா நினையுங்கள் அவர் திருப்பாதம் போற்றி! போற்றி !!

15.08.2024

சோழியூரான் பிறை சூடிக்குரு,
(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்)

(1740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 561





அதைக்கேட்டு வைக்கலாமே? ஒருவேளை கொல்லன் உலைக்களத்தில் தான் நுழைந்த போது அங்கிருந்து பின்பக்கம் சென்று மறைந்து கொண்டவன் இவன் தான் போலும்! அந்த அதிசயமான வாள் கூட இவனுடையதாக இருக்கலாம். அதன் கைப்பிடியில் அருகில் மீனின் சித்திரம் இருந்ததல்லவா? இவனுடன் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தால் புதிய செய்தி ஏதேனும் தெரியவரக்கூடும்.

ஆகையால் குதிரையை மெதுவாகவே செலுத்தினான் வல்லவரையன். முதன் முதலில் புதிது புதிதாக லாடம் அடிக்கப் பெற்ற அந்தக் குதிரையும் நடப்பதற்குக் கொஞ்சம் கஷ்டப்பட்டதாகத் தோன்றியது. அதை விரட்டியடிக்க மனம் வரவில்லை. "இங்கே எப்படி அப்பா, திடு திப்பென்று வந்து முளைத்தாய்!" என்று கேட்டான் வல்லவரையன்.

"நான் அல்லவா அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்? உன்னை நடுக்கடலில் கப்பல் பாய்மரத்தோடு கட்டி விட்டு வந்தோமே. எப்படி நீ தப்பி வந்தாய்?" என்றான் தேவராளன்.

"உனக்கு மட்டும் தான் மந்திரம் தெரியும் என்று நினைத்தாயோ? எனக்கும் கொஞ்சம் தெரியும்!"

மந்திரத்தில் உனக்கு நம்பிக்கை ஏற்பட்டது பற்றி எனக்கு மகிழ்ச்சி. என்னுடைய மந்திர சக்தியினால் நீ இங்கே தனியாகப் போய்க் கொண்டிருப்பாய் என்று நானும் அறிந்து கொண்டேன். அதனால்தான் நான் முன்னால் வந்து காத்திருந்தேன்.

ஏன் காத்திருந்தாய்? என்னிடம் உனக்கு என்ன காரியம்? நீயே யோசித்துப் பார்! அல்லது மந்திர சக்தியினால் கண்டுபிடி!" "உங்களுடைய இரகசியங்களை நடுக் கடலில் என்னிடம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கற்பனை என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் அந்த இரகசியங்களை நான் மறந்துவிடத் தீர்மானித்து விட்டேன். யாரிடமும் சொல்லப் போவதில்லை"

"அதைப்பற்றி நானும் கவலைப்படவில்லை. எப்போது நீ அந்த இரகசியங்களை யாரிடமாவது சொல்லலாம் என்று நினைக்கிறாயோ அப்போது உன் நாக்கு துண்டிக்கப்படும். நீ ஊமையாவாய்!"

வந்தியத்தேவனுக்கு உடல் சிலிர்த்தது. தஞ்சையிலும் இலங்கையிலும் அவன் சந்தித்த ஊமைப் பெண்களைப் பற்றிய நினைவு வந்தது. சற்றுத் தூரம் சும்மா நடந்தான்.

இந்தப் பாவி எதற்காக நம்மைத் தொடர்ந்து வருகிறான்? இவனிடமிருந்து தப்பிச் செல்வதற்கு என்ன வழி? கோடிக்கரையிலிருந்தது போல் இங்கேயும் சேற்றுப் பள்ளம் இருந்தால் எவ்வளவு உபயோகமாயிருக்கும்? அல்லது ஆற்றில் பிடித்துத் தள்ளிவிட்டுப் போகலாமா? அதில் பயனில்லை. ஆற்றில் தண்ணீர் அதிகம் கிடையாது.

வேறு வழி ஒன்றும் இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது உடைவாள். அதை எடுக்க வேண்டியது தான்.

"தம்பி, நீ என்ன நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது கைகூடாது. வீண் முயற்சியில் இறங்காதே!"

வந்தியத்தேவன் பேச்சை மாற்ற விரும்பினான். அவனிடமிருந்து தப்புவதற்குச் சிறிது சாவகாசம் வேண்டும். அதுவரை ஏதேனும் பேச்சுக் கொடுத்து வரவேண்டும். உன் கூட்டாளி ரவித்தாஸன் எங்கே?

தேவராளன் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "அது உனக்கல்லவா தெரிய வேண்டும்? ரவிதாஸன் எங்கே?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் திடுக்கிட்டான். ரவிதாஸனைப் பற்றிய பேச்சைத் தான் எடுத்திருக்கக்கூடாது. எடுத்தது தவறு. ரவிதாஸனை இவன் பார்த்துப் பேசிவிட்டு நம்மை ஆழம் பார்க்கிறானா? அல்லது "என்ன, தம்பி சும்மா இருக்கிறாய்? ரவிதாஸன் எங்கேயென்று சொல்லமாட்டாயா? போனால் போகட்டும்! அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலி எங்கே? அதையாவது சொல்!" (தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## இளவரசனின் தியாக உள்ளம்

(நேற்றைய தொடர்ச்சி)

இப்படியாக, ஒரு ஊரில் அவன் போய்க் கொண்டிருந்தான். அப்போது ஒரு வணிகனின் மனைவி அவனைக் கண்டு, உணவு அருந்த அவனை வீட்டுக்குள் வருமாறு அழைத்தாள்.

எந்த வீட்டிற்குள்ளும் நுழைவது இல்லை என்று சைகையால் காட்டி விட்டு அவன் நடந்து சென்று கொண்டிருந்தான்.

அவனுடைய அழகான தோற்றத்திலும், தாமரை மலர் போன்ற கண்களிலும் மனதைப் பறிகொடுத்தாள் வணிகனின் மனைவி. அவள் உள்ளத்தைக் கட்டுப்படுத்த இயலாமல், அவன் பின்னே ஓடி, "இத்தகைய பேரழகு பொருந்திய நீ பிச்சை எடுப்பானேன்? எந்தப் பெண்தான் உன் தாமரைக் கண்களைக் கண்டு மயங்காமல் இருக்க முடியும்?" என்று மருகினாள்.

அவள் கூறியதைக் கேட்டதும், "தாயே! இந்தக் கண்கள் தானே உன்னை மயங்கச் செய்தன? இதோ பார்! என்று கூறி, உடனே ஒரு கண்ணை தன் விரலால் தோண்டி எடுத்து அவனிடம் காட்டி, "இப்போது நன்றாகப் பார்! இந்தச் சதை துண்டா உன்னை மயக்கிற்று? என்று கேட்டான் துறவியான இளவரசன்.

வணிகனின் மனைவி, அழகு மயக்கத்திலிருந்து விடுபட்டு, "நீங்கள் ஒரு கண்ணை இழப்பதற்குப் பாவி நான் அல்லவா காரணமானேன்" என்று கதறி, அவன் காலில் விழுந்தாள்.

"தாயே! நீ எனக்குத் தீமை எதுவும் செய்யவில்லை. என் கண்ணைக் கெடுக்கவில்லை.

மாறாக, எனக்குப் பொறுமையைப் போதித்து விட்டாய் என்று கூறி துறவுக் கோலம் பூண்டிருந்த இளவரசன் புறப்பட்டான்.

துறவுக் கோலம் கொள்வதற்கு, மனவலிமை, உள்ளத் தூய்மை மிக அவசியமானதாகும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் குணங்களின் அனுபவத்தை அதிகப்படுத்தும் எண்ணங்களை செயலில் கொண்டு வாருங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொருளாசை வந்துவிட்டால் பொது நலம் கெட்டுவிடும்

அண்மையில் கேரள மாநிலத்தில் உள்ள வயநாடு, மண்சரிவில் அழிந்து போயிற்று.

ஒரு கணப்பொழுதில் நடந்த இயற்கையின் கோரதாண்டவம் 400க்கும் மேற்பட்ட மக்களை மண்ணுக்குள் புதைத்ததோடு, வயநாடு என்ற ஊரையும் அப்படியே காவு கொண்டது.

வயநாட்டில் ஏற்பட்ட மண்சரிவினால் மக்கள் இன்னலுற்று நிர்க்கதியாக நின்றபோது, கேரள நாட்டைச் சேர்ந்த ஒரு செல்வந்தர் தனக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலத்தை வயநாடு மக்களுக்காக ஈகை செய்தார்.

இவ்வாறு அந்தச் செல்வந்தர் தனது ஆயிரம் ஏக்கர் நிலத்தை தானமாக்கியபோது இந்திய தேசம் அவரை போற்றிப் புகழ்ந்தது.

இந்த விடயம் இங்கு ஏன்? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். இங்குதான் கொடையின் சிறப்பு உணரப்படுகிறது.

ஆம், குடியிருந்த நிலத்தை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து வாழ்வதற்கு இடமின்றி இருக்கின்ற மக்களுக்குத் தன்னிடமுள்ள ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்து உதவ வேண்டும் என்று நினைக்கின்ற அந்த உயரிய சிந்தனை இருக்கிறதே அதுதான் தெய்வீகம்.

ஆம், இங்குதான் மனிதன் தெய்வமாக மாறுகின்றான். எனினும் இத்தகைய வரலாறுகளை நாம் மறந்துவிடுகின்றோம்.

உண்மையில், இன்னலுற்ற மக்களுக்கு எம்மால் முடிந்ததை ஈகை செய்ய வேண்டும். அதுதான் மனிதநேயம்.

கொழுகொம்பற்றுக் கிடந்த முல்லைக்குத் தன் தேரைக் கொடுத்துவிட்டு, கால்நடையாக மனை ஏகினான் மன்னன் பாரி.

இது எதைக் காட்டுகிறது. ஓரறிவு படைத்த உயிர்களையும் பாதுகாக்கின்ற பொறுப்பும் கடமையும் ஆறறிவு படைத்த மனிதர்களுக்கே உண்டு. அதை நாம் செய்தாக வேண்டும்.

இருந்தும் எங்கள் தமிழ் அரசியலில் பொருளாசை கொண்டு செயற்படுகின்ற மிக மோசமான நிலைமை ஏற்பட்டுவிட்டதான தகவல்கள் மிகுந்த வேதனையைத் தருவதாகும்.

உண்மை. அரசியல் என்பது அறம் காப்பது. அதனால்தான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனச் சிலப்பதிகாரம் எடுத்துரைத்தது.

ஆக, அரசியல் தலைவர்கள் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களை மக்கள் நம்புகின்றனர். அவர்கள் தங்களின் உரிமைக்காக – தங்களின் வாழ்வியலுக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று மக்கள் நினைக்கின்றனர்.

இவ்வாறு நம்புகின்ற மக்களுக்கு நாம் என்றும் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும்.

பொருள் இன்று வரும் நாளை போகும். பதவிகள் எந்தக் கணத்திலும் இல்லாமல் போகலாம். ஆனால் மக்கள் மனங்களில் வாழுகின்ற உன்னதம் இருக்கிறதே அதுதான் மனிதத்தின் மாண்பு.

ஆகையால் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். அற்ப சொற்ப சலுகைகளை உதறித் தள்ள வேண்டும். நேர்மை என்றும் நிலையானது. அதை யாராலும் களங்கப்படுத்த முடியாது.

ஆகையால் மக்களுக்கு விசுவாசமாக – நேர்மையோடு நடந்து கொள்ளுங்கள். இதுவே எங்களின் தாழ்மையான கோரிக்கை.

## ஊழல்வாதிகள் ஆட்சிப்பீடம் ஏறுவதை தடுக்கவே தேர்தல் செலவீன சட்டம்

### விஜயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

*(கொழும்பு)*

தேர்தல்காலங்களில் இடம்பெறும் மோசடிகளை தடுப்பதற்காகவே தாம் அமைச்சுப் பதவி வகித்தபோது தேர்தல் செலவீனங்கள் தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாக ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகள் மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. தேர்தல் பிரசார பணிகளும் இடம்பெறுகின்றன.

இன்று பிரசாரங்களைப் பார்க்குமிடத்து அவை தேர்தல் மோசடியாகவே தெரிகின்றது. ஏனெனில் அவற்றில் லஞ்சப்பணம் பயன்படுத்தப்பட்டது.

ஊழல் மோசடிகளில் மூழ்கியுள்ள அரசியல் தலைமைகளே நாட்டின் ஆட்சியாளர்களாக வருகின்றனர். இந்த ஊழல்களை ஒழிப்பதற்காகவே நான் தேர்தல் செலவீன சட்டத்தினை கொண்டுவந்தேன்.

நான் இந்த சட்டமூலத்தைப் பாராளுமன்றில் முன்வைத்தபோது எதிர்க்கட்சியினர் அதற்கு எதிராகச் செயற்பட்டனர். எனினும் பாரிய சிரமத்திற்கு மத்தியில் நாம் பாராளுமன்றில் சட்டமூலத்தை நிறைவேற்றினோம்.

தேர்தல் செலவீனங்கள் தொடர்பாக வாக்காளர் ஒருவருக்கு குறைந்த பட்சம் 20 ரூபாவே செலவிட வேண்டும் என நானும் மற்றுமொரு வேட்பாளரும் அண்மையில் தேர்தல் ஆணையாளரிடம் கூறியிருந்தோம்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி ஐக்கிய மக்கள் சக்தி ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆகியன தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு மாத்திரம் 68 லட்சம் ரூபா தேவைப்படுவதாகக் கூறியிருந்தனர்.

இவை அனைத்தும் மோசடியானவையே இவ்வாறு விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## சந்நிதியானின் இரதோற்சவத்தில் 35 பவுண் தங்க நகைகள் மாயம்

### வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்த பக்தர்களின் சுமார் 35 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவினை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அதன் போது ஆலய சூழல்களில் சனநெரிசல்களை பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசைகளை காட்டியுள்ளனர்.

பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## தொடருந்து விபத்து ஒருவர் பலி : ஒருவர் காயம்

*(கொஸ்கட)*

மஹா இந்துருவ தொடருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள தொடருந்து கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருகையில், காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்து கொஸ்கொடவில் இருந்து விறகு ஏற்றிச் சென்ற பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பாரவூர்தியில் பயணித்த இருவரில், இந்துருவ பிரதேசத்தை சேர்ந்த 55 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது நிலைமை மோசமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொஸ்கட பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

### எம்.பி பதவியையிழந்த

## மனுஷ - ஹரின் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமனம்

*(கொழும்பு)*

முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, காணி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஆலோசகராக ஹரின் பெர்னாண்டோவும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசகராக மனுஷ நாணயக்காரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்ததையடுத்து அவர்களது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்ய நேரிட்டது.

இதனையடுத்தே ஜனாதிபதியினால் குறித்த நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவ் நியமனங்கள் தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரானது என எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன. (ம-7)

## தொடரும் யுக்திய 673 பேர் கைது

*(கொழும்பு)*

கடந்த 24 மணித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையில் 663 ஆண்களும் 10 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களுள் 07 பேர் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு, 02 பேர் புனர்வாழ்வுமையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் மேல்மாகாணத்தில் 418 ஆண்கள் மற்றும் 05 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களிடமிருந்து 90 கிராம் ஹெரோயின், 127 கிராம் ஐஸ் மற்றும் 236 கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 52 கிராம் ஹெரோயின், 1843 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## ஓட்டோ சாரதி கொலை சந்தேகநபர் கைது

பத்தரமுல்லை - தலங்கம அருக்பிட்டிய பகுதியில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி பழுதுபார்ப்பு நிலையமொன்றுக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கொலை சம்பவத்தில் தலவத்துகொட பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதோடு,

இந்தச் சம்பவம் தொடர்பில் தலங்கம தெற்கு பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

02

இலங்கையின் அரசியலில் மதம், சாதி, மொழி என்பன தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து இன மக்கள் மத்தியிலும் செல்வாக்கு செலுத்துகின்றமையே யதார்த்தம். தமிழர்கள் மத்தியிலும் அவ்வாறே! பௌத்த பிக்குகள் அனைவரும் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பாக ஒரு முகமாக ஒரே அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக சாதகமான நிலைப்பாடுகளைக் கொண்ட பௌத்த குருமார்கள் பரவலாக பெருந்தொகையாகவே உள்ளனர். அவ்வாறானவர்களை அணுகி, அவர்களின் ஆதரவுக் குரல்களை திரட்டுவது இங்குள்ள நிலைமையில் மிகவும் அவசியமாகும்.

சமஷ்டி என்ற கருத்துருவம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமான சமஷ்டி அமைப்புகள் நடைமுறையில் இருக்கின்றன. சமஷ்டி அலகிலும் பார்க்க மத்திக்குக் கூடுதலான அதிகாரங்கள் உள்ள சமஷ்டி அமைப்பு கனடாவில் உள்ளது. அவுஸ்திரேலியாவில் சமஷ்டி அலகுகள் மத்தியிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் சமஷ்டியும் ஒற்றையாட்சியும் இணைந்த கலப்பு முறை நடைமுறையில் இருக்கின்றது. இவற்றுள் எவ்வாறான சமஷ்டி அமைப்பைக் கோருகின்றது என்பதைத் தமிழ்க் கட்சிகள் தெளிவுபடுத்தவில்லை. எனினும் சமஷ்டி என்ற கருத்துருவம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்தது.

இலங்கைக்கு ஒரு சமஸ்டி ஆட்சி முறை வேண்டுமென்று முதலில் கேட்டவர் எஸ்.டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா இலங்கையின் அனைத்துச் சமூகங்களுக்கும் சமத்துவ உரிமைகளை உறுதிப்படுத்தும் அமைதியான நீதியான எதிர்காலத் தொலைநோக்கே சமஷ்டி எண்ணக்கரு. இதன் கட்டமைப்பு ஐக்கிய இலங்கையாகும். 1926 இல் இலங்கைக்கு ஒரு சமஸ்டி ஆட்சிமுறை குறித்த ஒரு யோசனையை எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக திரு.எஸ். டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க அவர்கள் வெளியிட்ட கருத்து ஆறு கட்டுரைகளாக 1926ஆம் வருடம் மே - ஜூன் மாதங்களில் சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது என்று பதிப்பாசிரியர் லயனல் குருகே அவர்களால் வெளியிடப்பட்ட "இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005)" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

அது வருமாறு: "இலங்கையில் வாழ்ந்து வரும் பல இன மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண் கொண்டு நோக்கி வருகின்றனர். அவர்களுக்கிடையில் நிலவி வரும் வேறுபாடுகள் அடிப்படையான வேறுபாடுகளாக இருந்து வரவில்லை எனக் கருதுவது தவறானதாகும். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் அத்தகைய வேறுபாடுகள் இருந்து வரவில்லை. தமிழர்கள், மலைநாட்டுச் சிங்களவர்கள் மற்றும் கரையோரச் சிங்களவர்கள் ஆகிய அனைவரும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த காரணத்தினால் அத்தகைய வேறுபாடுகள் தலைதூக்கவில்லை.

ஆனால், ஆட்சியதிகாரத்தை தமது கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டுமென இலங்கை மக்கள் குரலெழுப்பத் தொடங்கியமையை உடனடுத்து, உள்ளே அமுங்கிக் கிடந்த இத்தகைய வேறுபாடுகள் தீப்பொறிகள் போல வெளிக்கிளம்பத் தொடங்கின. தமிழர்கள், கரையோரச் சிங்களவர்கள் மற்றும் மலைநாட்டுச் சிங்களவர்கள் ஆகிய சமூகப் பிரிவினர் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டில் வாழ்ந்து வந்திருந்த போதிலும், ஒருவருடனொருவர் இணைந்து கொள்வதற்கு அவர்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆயத்தமாக இருந்து வரவில்லை என்ற விடயத்தையே வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

அவர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்கள், மொழி மற்றும் சமயம் என்பவற்றை தனித்தனியாகப் பின்பற்றி வருகின்றனர். இந்த வேறுபாடுகள் காலப்போக்கில் ஒழிக்கப்பட்டு விடுமென ஒரு முட்டாள் மட்டுமே கருதிக் கொள்ள முடியும். சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இடம்பெறும் ஒரு விடயம் அனைத்து சமஷ்டி அலகுகளுக்கும் தன்னாதிக்கம் கிடைப்பதாகும். அதேவேளையில், அனைத்து அலகுகளும் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றன. முழு நாட்டையும் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு அவர்களுக்கு ஒரு அரசாங்கச் சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருந்து வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவில் இத்தகைய ஒரு ஆட்சி முறையே காணப்படுகின்றது. கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற சுயாட்சிக் குடியரசுகளிலும் அத்தகைய ஒரு ஆட்சி முறையே இருந்து வருகின்றது. சுவிட்சர்லாந்தில் காணப்படும் ஆட்சி முறை இலங்கைக்கு மிகவும் பொருத்தமான ஒரு முன்மாதிரியாக இருந்து வருகின்றது. அது மிகவும் சிறிய ஒரு நாடாகும். எனினும், அங்கு பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமூகக் குழுக்கள் வாழ்ந்து வருகின்றன. சுவிட்சர்லாந்தில் சமஷ்டி வகையைச் சேர்ந்த ஆட்சி முறை மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதனைக் காண முடிகின்றது.

## இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்துக்கும் முழுமையான சுயாட்சி உரிமை இருந்து வருதல் வேண்டும்.

இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்துக்கும் முழுமையான சுயாட்சி உரிமை இருந்து வருதல் வேண்டும். நாட்டின் விசேட வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பன குறித்த முடிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு அரசாங்க சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருத்தல் வேண்டும். இந்த ஆட்சி முறைக்கெதிராக எண்ணற்ற தர்க்க நியாயங்களை எவரும் முன்வைக்க முடியும். எனினும், அந்த எதிர்ப்புக்கள் குறைவடைந்து சென்ற பின்னர் சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குள்ள ஒரேயொரு தீர்வு என்ற நிலை ஏற்படும்."

1920களில் ஓர் இளைஞராக இருந்து வந்த திரு எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க முன்வைத்த மேற்படி கருத்துக்கள் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சி முறை தேவைப்படுவது ஏன் மற்றும் அதற்கெதிராக முன்வைக்கப்படும் தர்க்க நியாயங்கள் ஆதாரமற்றவையாக இருந்து வருவது ஏன் என்ற இரு கேள்விகளுக்கும் பதிலளிக்கின்றன என்று அந்நூலில் கூறப்பட்டுள்ளது.

பத்திரிகைக்கு 6 கடிதங்கள் எழுதியதோடு பண்டாரநாயக்க நின்றுவிடவில்லை. அவர் யாழ்ப்பாணத்திற்கு சென்று சமஸ்டி முறையை ஆதரித்து உரையாற்றினார். 1926 இல் அவர் சமஸ்டி எண்ணத்தை யாழ்ப்பாணத்தில் விதைக்கமுயன்றார். உண்மையில் யாழ்ப்பாணம் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

பண்டாரநாயக்க பத்திரிகையில் கூறி வந்தது மாத்திரமல்லாமல் டொனமூர் குழுவினர் 1931 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சம்பந்தமாக மக்களிடம் அபிப்பிராயம் கோரிய போதும் சிங்கள மகா சபை சார்பில் சாட்சியமளித்த பண்டாரநாயக்க மூன்று அலகுகளைக் கொண்ட கூட்டாட்சி மூலமான அரசியல் தீர்வைத் தருமாறு டொனமூர் ஆணைக்குழுவை கோரியதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

டொனமூர் ஆணைக்குழுவின் முன்பாக கண்டிச் சிங்களவர்களின் பிரதானிகளும் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது என்று நியாயப்படுத்தினார்கள். டொனமூர் ஆணைக்குழுவின் முன்பாக கண்டிச் சிங்களவர்களின் பிரதானிகளும் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது என்று நியாயப்படுத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிங்களத் தலைவர்களால் முன்னுரை எழுதி தொடக்கப்பட்ட ஒரு விவகாரமாகவே சமஷ்டி அமைப்பு என்னும் கருவூலம் இலங்கையில் உருவாக்கப்பட்டது.

**"தனியான அரசு ஒன்றை உருவாக்கும் உரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமையுடன் தனியான தேசத்தவர்களாகத் தமிழர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்" - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**

"தனியான அரசு ஒன்றை உருவாக்கும் உரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமையுடன் தனியான தேசத்தவர்களாகத் தமிழர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்ற விடயத்தை முதன் முதலில் முன்வைத்தது ஒரு தமிழ்க் கட்சியல்ல. அதனைக் கேட்டது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிதான். 1944இல் அக்கட்சி தானும் ஓர் அங்கமாக இருந்த இலங்கை தேசிய காங்கிரசிடம் தான் சமர்ப் பித்த மகஜரில் சமஷ்டி அரசமைப்புக் குறித்து பிரஸ்தாபித்திருந்தது. தமிழரசுக் கட்சிப் பிறப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னரே கெனமன் - வைத்தியலிங்கம் இம் முன்மொழிவை இலங்கை தேசிய காங்கிரசிடம் சமர்ப்பித்தனர்.

சோல்பரி ஆணைக்குழுவிடம் சமஷ்டி அமைப்பை நாடு கொண்டிருக்க வேண்டும் என்ற எந்தத் தீர்க்கமான முன்மொழிவும் தமிழ்த் தலைவர்கள் உட்பட எந்த அமைப்பினாலும் முன்வைக்கப்படவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதியில்...

தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த விடுதிக்குப் பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அதன்போது, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய மூன்று யுவதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட யுவதிகளை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், மூவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (ம-7,33)

## தேர்தல்...

தெரிவித்துள்ளது.

39 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை என்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 16 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, இந்த வருடம் இரண்டு இலட்சத்து இருபத்து 5000 அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும்,

13,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பிரசாரங்களுக்கு...

டுள்ள சுற்றறிக்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்கு மதச் சின்னங்களைப் பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## தேர்தலைக்...

ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் தேர்தல் செயன்முறைகளை சுமார் 6 சந்தர்ப்பங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வாக்காளர்...

ரூபாயைத் தேர்தல் பிரசாரத்தின்போது வாக்காளர்களுக்கு செலவிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## நாடு முழுவதும்...

பக்ஷ தெரிவித்தார்.

களனி ரஜமஹா விகாரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் என்பது சவால்மிக்கது. அனைத்துத் தரப்பினரும் வெற்றி பெறவே முயற்சிப்பார்கள். ஆகவே இந்தத் தேர்தல் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்குச் சவாலானது.

எம்மை விட்டு விலகிச் சென்றவர்கள் பற்றிப் பேசி இனிப் பயனில்லை. செல்பவர்களை பலவந்தமாகத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. பலவந்தமாகவும் வெளியேற்றவும் முடியாது. இருப்பவர்களைக் கொண்டே முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவேன். எம் மீதான மக்களின் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம்.

தேர்தல் காலத்தில் எம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தேர்தல் காலப் பிரசாரமாகக் காணப்படுகிறது. சேறு பூசுவதை விடுத்து கொள்கையை முன்னிலைப்படுத்திச் செயற்படுமாறு அரசியல் தரப்பினரிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம-7)

## வேலையில்லாப்...

இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது ஆட்சியில் பல மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளோம். குறிப்பாக ஜனாதிபதி செயலகத்தை ஒரே இடத்தில் இயங்கும் நிலையமாக மாற்றவுள்ளோம்.

நாட்டில் முதலீடு செய்யவரும் முதலீட்டாளர்களுக்கு விரைவான அங்கீகாரம் வழங்கவும், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் பல தீர்மானங்களை ஏற்கெனவே எடுத்துள்ளோம்.

மேலும் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தையும் அமுல்படுத்தவுள்ளோம்.

இளைஞர் சமுதாயத்தினரின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன், வீடு கட்டும் கிராமங்களின் எழுச்சி என்ற புதிய திட்டத்தை இந்த நாட்டில் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம் இவ்வாறு சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## அர்...

யளித்துள்ளார்.

கிரிபத்கொடப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அநுராதபுரத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது ரணில் விக்கிரமசிங்க என்னை அவமதித்துப் பேசினார். அநுர இதற்குப் பதிலளியுங்கள் என ரணில் கூறும்பொழுது அவரது வார்த்தை தவறியதை அனைவரும் அவதானித்திருந்தனர்.

மேலும் நாங்கள் அவரை அவமதிக்க விரும்பவில்லை. தேசிய மக்கள் சக்தியில் இருந்து இந்த நாட்டை ஆள்வதற்கு யார் இருக்கின்றனர்? என ரணில் உட்பட அனைவரும் கேட்கின்றனர்.

ஏனைய கட்சிகளிலும் யார் இருக்கின்றனர்? நான் ஒரு பதில் தருகிறேன்.

மத்திய வங்கி மோசடி தொடர்பில் நீதிமன்றினால் சிவப்புப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள, சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்ற அர்ஜுன மகேந்திர இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்.

மத்திய வங்கிக்குப் பொறுப்பான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தான் இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு ஆலோசனை வழங்கியதாக கோப் குழுவிடம் அர்ஜுன மகேந்திர பதில் அளித்தார்.

அர்ஜுன மகேந்திரனை அழைத்து வருவதே எனது முக்கிய வேலை. இதை வாய்வார்த்தையில் கூறாது செயலில் காண்பிக்க விரும்புகிறேன் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 5570 — Q 5 8 3 6 1 8
அத சம்பத — Q 3 6 1 8 — சீட்டிழுப்பு இலக்கம் 145 — National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1600 — O 02 09 72 74 O — Double Chance 54074

மெகா பவர் — திகதி 19/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1918 — I 20 56 62 64 67 — 29124

லக்கி 7 VIP — திகதி 2024.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0396 — E 339302 E

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3812 — சீட்டிழுப்பு திகதி 19.08.2024 — X 16 41 70 76 — X 59214 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0879 — ரிஷபம் 03 11 22 52 ரிஷபம் — 35668 — 13

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல சம்பத — 19.08.2024 — வெற்றி வாரம் 278 — வர்ணம் ஊதா — T 573104 — 61145 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,355,208.00 — DLB

அட கோடிபதி — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2370 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,926,740.80 — 56 58 71 76 L — 824019 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2544 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 19.08.2024 — தினம் திங்கள் — 07 08 09 65 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,776,497.60 — DLB

சனிதா — 2024.08.19 — வெற்றி வாரம் 4705 — 28 30 36 43 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,969,296.00 — 75605 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4256 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.19 — தினம் திங்கட்கிழமை — 50 52 60 61 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,091,170.00 — 126487 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Z 16 06 24 25 66 — 1720 — பச்சை — 19.08.2024 — திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 539,866,760.60 — DLB

ஜயோதா Jayoda — 2024.08.19 — வெற்றி வாரம் 2052 — 01 13 14 34 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,912,530.00 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு வேப்பந்திடலில் இன்று பாலஸ்தாபனம்

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந் திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை பாலஸ்தாபனம் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.35 தொடக்கம் 12.00 மணிவரையான சுப வேளையில் பாலஸ்தா பனம் இடம்பெறும். (ம)

# கர்தினாலை சந்தித்த நாமல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, பேராயர் மல் கம் ரஞ்சித்தை நேற்று பொரளையில் உள்ள பேராயரின் உத்தியோ கபூர்வ இல்லத்தில் சந் தித்தார்.

இந்த சந்திப்பின் போது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்க ளுக்கு காரணமானவர் களை விசாரிக்க சுயா தீன ஆணைக்குழுவின் அவசியத்தை பேராயர் வலியுறுத்தினார்.

இந்த நோக்கத்திற் காக ஒரு சுயாதீன நீதி த்துறை ஆணைக் குழுவை நிறுவுவதன் முக்கியத்துவத்தை நாமல் ஒப்புக்கொண் டார். (ம-7)

# ஐ.எம்.எப்புடன் புதிய உடன்படிக்கை

## சஜித் திட்டவட்டம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய உட ன்படிக்கையை செய்து கொள்ளவுள்ளதாக எதிர் க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித் துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட் டணி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் புதிய உடன்படிக்கை மனிதா பிமானத்தை மையமா கக் கொண்டதாக அமை யும் என அவர் தெரிவித் துள்ளார்.

தற்போதைய, சர்வ தேச நாணய நிதிய உட ன்படிக்கையை ஒரு புதிய அரசாங்கம் திரு த்த முடியாது என்று அர சாங்கம் கூறுகிறது.

எனினும், மனிதாபி மான அடிப்படையிலான புதிய ஒப்பந்தத்தின் மூலம் அதனை திருத் தம் செய்யவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.(ம-7)

# பொலிஸ் உத்தியோகத்தரை கொலை செய்த மூவர் கைது

பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவரைத் தாக் கிக் கொலை செய்த சம் பவத்துடன் தொடர்பு டைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

தங்காலை பிரிவு குற் றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவி னால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

தங்காலை கதுரு பொகுன பிரதேசத்தில் அண்மையில் இக்கொ லைச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்துடன் தொட ர்புடைய பிரதான சந் தேக நபர் நேற்று முன் தினம் கண்டி பிரதேசத் தில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

தங்காலை கதுருபொ குன பிரதேசத்தைச் சேர் ந்த 33 வயதுடைய சந் தேகநபரிடம் இருந்து ரி-56 ரக தோட்டாக்களைப் பயன்படுத்தக்கூடிய உள் ளூர் துப்பாக்கி ஒன்றும் ரி-56 ரகத் துப்பாக்கிக ளுக்கான 12 தோட்டாக் களும் கைப்பற்றப்பட்டு ள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், தங் காலை பிரதேசத்தில் கைவிடப்பட்ட வீடொ ன்றில் பதுங்கியிருந்த மற்றைய இரு சந்தேக நபர்களும் நேற்று அதி காலை கைது செய்யப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# ஜனாதிபதி...

தாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, அரச பணியாளர்களுக் கான சம்பளத்தை 25,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது 17,000 ரூபா வாகவுள்ள அரச பணியாளர்களுக் கான வாழ்க்கைச் செலவுக் கொடுப் பனவே 25,000 ஆக அதிகரிக்கவுள் ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், பொருளாதார மீட்சியை அடைந்து வரும் சந்தர்ப்பத்தில் அரச பணியாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க முடியாதெனக் கூறிய ஜனாதிபதி, தேர்தல் நெருங்கும் நேரத் தில் இவ்வாறான வாக்குறுதிகளை வழங்குகின்றார் எனவும் கேள்வி எழுப் பியுள்ளார்.

அவரின் அந்த மாற்றம் தற்போது அவருடன் இணைந்துள்ள சிலரின் அறிவுறு த்தலுக்கு அமைய மேற்கொள்ளப் படுகிறதா என்பது தெரியவில்லை என்பதுடன்,

ஜனாதிபதி பொறுப்புடன் கூறிய கருத்துக் களை தற்போது பொறுப்பற்ற வித த்தில் கூறிவருகி ன்றார் எனவும் தெரிவித் துள் ளார். (ம-7)


வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கும் பிரபல புடவைக் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. இருபாலாரும் (ஆண்/பெண்) விரும்பத்தக்கது. (265)

077 839 3974
077 606 1333

3ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 . 05 . 1947

ஆண்டவன் அடியில் 23 . 08 . 2021

அமரர் நாகலிங்கம் இரட்ணம்

திதி: தேய்பிறை பிரதமை

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் - எம்முன்னே
உங்கள் சிரித்த முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு நீங்கள் மறைந்து
ஆண்டு மூன்று ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றென்றும்
நிலையாக வாழ்ந்திடுவீர்கள்.
ஓம் சாந்தி (263)

29/34, தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1016) 076 825 7716 (ஆகாஸ்)

Sky Computer System

Laptop விசேட விலையில்



நல்லூர் ஆலய திருவிழாவினை முன்னிட்டு I5 Laptop - 48,750/= தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு - CCTV Camera பொருட்களும் விசேட விலையில் வழங்கப்படும்.

Jaffna Town (C-1017) 075 069 8608

மொத்தக் கொள்வனவு

400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள் (272)

Happy Super market உரும்பிராய்

077 773 0900

இந்தியன் விசா சேவைகள்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (272)

V2 VISA SERVICES கனடா

077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri Lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி

போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.

(C-1015) CIMS College 49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills

0777 068 777 / 077 7719 322


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.